[19th November 1963

ஆனால் ப்ரைமரி ஹெல்த் சென்டர்களைப் பொறுத்த வரையில்தான் அவற்றில் வேலை செய்யும் டாக்டர்களுக்கு அரசாங்கம் வீடு வசதி, இன்னும் இதர வசதி செய்து தந்து கொண்டிருக்கிறார்கள்.

Industrial Estates

* 277 *Q.*—SRI K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) how many Industrial Estates have been opened in this State and the total investment on them; and

(*b*) the steps taken to promote the sales of the products manufactured in these estates?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) So far nine Industrial Estates have been established in this State at a total cost of Rs. 192.97 lakhs.

(*b*) No special steps are taken by the Government for the promotion of the sales of the products manufactured by the industries in the Industrial Estates alone. The facilities for marketing available to small-scale industries will be afforded to the industries in the Industrial Estates also. The various facilities available for securing market for the products of small-scale industries are—

(i) establishment of sales emporia by the Government;

(ii) marketing service by the National Small Industries Corporation through their mobile sales vans;

(iii) registration of small-scale industries with the Director-General of Supplies and Disposals, Government of India, without the payment of the fee for application form; and

(iv) price preference over the prices quoted by large scale industries is shown in respect of purchases made by Government Departments. Local bodies have also been requested to extend similar price preference.

திரு. கே. மூக்கையா தேவர் : இம்மாதிரி தொழில்பேட்டைகளை தனியார் துறையில் ஆரம்பிக்க யாரேனும் அனுமதி கேட்டிருக்கிறார்களா ? அப்படி இருந்தால் அவர்களுக்கு அனுமதி வழங்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனியார் துறையில் தொழிற்பேட்டை ஆரம்பிக்க முடியாது. கூட்டுறவு முறையில் ஆரம்பிக்க விண்ணப்பம் வந்து கொண்டிருக்கிறது. கூட்டுறவு முறையில் ஆரம்பிக்கவும் அனுமதி கொடுத்து வருகிறோம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இலங்கையில் இருந்து நாடு திரும்பியவர்களுக்கு என்று திருநெல்வேலி ஜில்லாவில், திருச்செந்தூர், நாங்குநேரி ஆகிய இடங்களில் கூட்டுறவு முறையில்

19th November 1963]

தொழில் பேட்டை ஆரம்பிக்க அனுமதி வேண்டுமென்று கோரி விண்ணப்பம் வந்திருக்கிறதா? அவ்வாறு கோரிக்கை வந்திருந்தால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கூட்டுறவு துறையில் வைப்பதற்கு யார் முன் வந்தாலும் எந்தவித ஆட்சேபணையும் இல்லாமல் அனுமதி கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராய் இருக்கிறது. சர்க்காரின் செலவில் வைக்கவேண்டுமென்று சொன்னால்தான் அதைப் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கும். அதுவும் நிதி நிலைமையைப் பொறுத்தது. நாங்குநேரியில் இருந்து இதுவரையில் அந்தமாதிரி கோரிக்கை வந்ததாகத் தெரியவில்லை.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: தொழில்பேட்டை மாதிரி சிறுசிறு சர்வீஸ் சென்டர்களை ஆங்காங்கே ஏற்படுத்த உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போது ஒவ்வொரு ப்ளாக்கிலும் கார்ப்பென்டரி, ஸ்மித்தி பயிற்சி கொடுக்கிறோம். சில இடங்களில் ஜெனரல் என்ஜினீயரிங் வொர்க்ஷாப் வைத்து பயிற்சியும் அளிக்கிறோம். இதைத்தவிர வேறு கிடையாது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் தலைவர் அவர்களே, தொழிற்பேட்டையில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு நல்ல விளம்பரம் தேடும் முறையில் சென்னையில் ஒரு கண்காட்சி சாலை ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போது கிண்டியில் இருக்கிற தொழிற்பேட்டையில் ஷோ ரூமில் அங்கே உற்பத்தி செய்யப்படுகிற பண்டங்கள் ஒவ்வொன்றும் டிஸ்ப்ளே முறையில் வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது அங்கே உற்பத்தியாகிற பண்டங்கள் உற்பத்தி ஆவதற்கு முன்னமேயே விற்றுக்கொண்டிருப்பதனால் கனம் எதிர்கட்சித் தலைவர் சொல்கிற அளவுக்கு முயற்சிகள் எடுக்கப்படவில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி: தொழிற்பேட்டையில் இருக்கக்கூடிய கட்டிடங்களில் கைத்தறி நெசவாளர்கள் அனுமதிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கைத்தறித்தொழிலுக்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது. அவர்களுக்குத் தனியாகத் திட்டம் இருக்கிறது.

*278 **கேள்வி.—திரு. கரு. சிமைச்சாமி:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிவகெங்கையில் ஆரம்பிக்க இருக்கும் தொழிற்பேட்டை எப்போது ஆரம்பிக்கப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சிவகெங்கையில் தொழிற்பேட்டை ஏற்படுத்தும் திட்டத்திற்கு 1963 மார்ச் மாதத்தில் அனுமதி வழங்கப்பட்டது. அதற்கான பூர்வாங்க வேலைகள்